18.11.2025.
எம்.சி.5/2023.

ம.சா.2, வெங்கடேசன், த/பெ.பெருமாள் காளத்தி.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

1ம் எதிர்மனுதாரர் எனக்கு எப்படி பழக்கம் என்றால் நான் உத்திரமேரூர் பள்ளியில் பணியாற்றிய காலத்தில் 1ம் எதிர்மனுதாரர் பள்ளியில் வாட்ச் மேனாக பணியில் சேர்ந்து பணிபுரிந்தார்.1ம் எதிர்மனுதாரர் தனக்கு பெண் பார்க்குமாறு என்னிடம் கேட்டாரா என்றால் கேட்டார். மனுதாரர் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் 1ம் எதிர்மனுதாரருக்கு பெண் பார்க்க மேட்ரிமோனியில் வளைதளத்தில் பதிவு செய்தபோது அறிமுகமானார். திருமணம் சம்மந்தமாக மனுதாரா் குடும்பத்தில் யாரிடம் தொடா்பு கொண்டு பேசினேன் என்றால் மனுதாரரின் சகோதரரான வெங்கடேசனிடமும ் மற்றொரு சகோதரனிடமும ் தொலைபேசியில் பேசினேன். இரு வீட்டார் சம்மதத்தின்பேரில்தான் திருமணம் நடந்ததா என்றால் எதிர்மனுதாரர் குடும்பத்தில் வேறு யாரும் இல்லையென்று என்னிடம் கூறியதால் வேறு யாரும் பேச வரவில்லை. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2020ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்திற்கு எதிர்மனுதாரரின் குடும்பத்தினா ் கலந்துகொண்டார்களா என்றால ் அவரது அம்மாவும், அண்ணனும் கலந்துகொண்டார்கள ் ஆனால ் சாப்பிடாமல ் சென்றுவிட்டார்கள். இருவீட்டாரும் முன்னின்றுதான் திருமணத்தை நடத்தினார்கள் என்றாலும் நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் மேற்படி திருமணத்தை முன்னின்று நடத்தினேனா என்றால் இருதரப்பிலும் பெரியோர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரின் அக்கா மற்றும் மாமா ஆகியோா் முன்னின்று திருமணம் நடத்தினார்கள். திருமணத்திற்கு பிறகு மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்ட விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மனுதாரர், எதிர்மனுதாரா ் மூலமாகவும் தெரியவந்தது.

மேற்படி பிரச்சனைக்கு பிறகு இருவரையும் அழைத்து பேசினேனா என்றால் எதிர்மனுதாரரை மட்டும் அழைத்து பேசினேன். அவ்வாறு பேசியபோது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எதனால் பிரச்சனை என்று தெரியவந்ததா என்றால் எதிர்மனுதாரரின் சகோதரா ் மற்றும ் தாயாரின ் தொல்லை காரணமாக பிரச்சனை என்று கூறினார். நான் இருதரப்பினா்களையும் அழைத்து பேசாமல் எதிர்மனுதாரரை மட்டும் அழைத்து பேசியதால் மனுதாரருக்கு மட்டும் சாதகமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த பிரச்சனைகள் எனக்கு நேரடியாக தெரியாது. போன்மூலமாகதான் தெரியும். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் செய்ய நான் மேட்ரிமோனியின்மூலமாக இடைத்தரகராக இருந்ததால் எதிர்மனுதாரர் மேற்படி திருமணத்திற்கு எந்தவித பணமும் எனக்கு கொடுக்காததால்தான் மனுதாரர் மட்டும் பணம் கொடுத்ததால் நான் மனுதாரருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.